The Hindu (English)

Dated: 27.02.2024

## Voter awareness campaign in all polling stations in Chennai

Voter awareness programmes will be organised at all polling stations in Chennai for a month to improve electoral participation. Chief Electoral Officer Satyabrata Sahoo, accompanied by Greater Chennai Corporation Commissioner J. Radhakrishnan, on Monday flagged off three vehicles at Ripon Buildings to create awareness in the city's three Parliamentary constituencies. "The voting percentage is low in urban areas such as Chennai. There is apathy during elections in Parliamentary constituencies in the city. The vehicles will carry electronic voting machines (EVMs) and voter-verified paper audit trail (VVPAT) units, and create awareness among voters in all polling stations," Mr. Sahoo said.

## 25 companies of Central police forces allotted for poll duty

Ahead of the Parliamentary elections, the Union Home Ministry has allotted 25 companies of the Central Armed Police Forces to Tamil Nadu for area domination and confidence-building measures, among other purposes. Chief Electoral Officer Satyabrata Sahoo said that 15 companies would be inducted from March 1, and 10 more would be inducted from March 7 into the State. As of January, the electorate in Tamil Nadu stood at 6.18 crore, including 3.14 crore women, 3.03 crore men and over 8,294 third gender voters. The State has 39 Lok Sabha constituencies.

Dt.Next, Dated: 27/2/2024

# Banks, post offices to join campaign on importance of voting ahead of LS polls

**NEW DELHI: The Election Commission on Monday roped in banks and post offices to spread voter awareness as part of its efforts to increase voting percentage in the upcoming Lok Sabha polls.**



**Election Commission officials at the launch event**

The poll panel has often expressed concern over urban and youth apathy with many registered voters not turning up at the polling stations to cast ballot in the previous elections. Over 30 crore of the 91 crore electors did not cast their ballot in the previous parliamentary polls.

The Election Commission (EC) on Monday signed a memorandum of understanding (MoU) with two prominent organisations-the Indian Banks' Association (IBA) and the Department of Posts (DoP)-to amplify its voter outreach and awareness efforts ahead of the Lok Sabha elections.

The initiative, the poll panel said, is in continuation of its efforts to enhance electoral awareness in the country.

The EC had recently signed an MoU with the Ministry of Education to formally integrate electoral literacy into the educational curriculum of the schools and colleges.

The latest initiative has been taken based on insights and knowledge gained by Chief Election Commissioner (CEC) Rajiv Kumar from his past roles and experience working in the financial sector, particularly in the Indian banking sector and India Post Payments Banks, the officials pointed out.

As part of the MoU, the IBA and the DoP with its members and affiliated institutions will extend support in promoting voter education through their extensive network on a pro bono without charge basis, employing various interventions to empower the citizens with knowledge about their electoral rights, processes and steps for registration and voting.

The members and affiliated institutions will now display voter education messages prominently on their websites, directing visitors to learn about electoral process.

Voter education content will be disseminated through various promotional channels such as social media and customer outreach platforms of member institutions, ensuring widespread awareness among stakeholders and the public, the EC said.

The Hindu (English)
Dated: 27.02.2024

# In meet with EC, Trinamool flags deactivation of Aadhaar

**The Hindu Bureau**
NEW DELHI

A five-member delegation of the Trinamool Congress on Monday met the Election Commission (EC), urging it to ensure that thousands of people in West Bengal whose Aadhaar cards had been allegedly deactivated are not barred from casting their votes in the Lok Sabha elections.

The EC assured the leaders that voters would not be stopped from exercising their franchise. The voters can cast their ballot by showing their voter ID cards or any of the other specified identity documents, the EC said. The delegation met the Chief Election Commissioner and raised the issue of alleged Aadhaar deactivations.

Briefing presspersons after the meet, Mr. Ray said Aadhaar cards of several thousands of people were deactivated without following the due process. The complaints to the Unique Identification Authority of India went in vain.

The Trinamool also questioned the inclusion of the ED in the District Intelligence Committees created by the EC to oversee expenditure in "financially sensitive areas".

The party pointed out that in 2022, the ED was granted permission to carry out property searches and seizures in Prevention of Money Laundering Act cases, even in the absence of a formal complain. "The agency has focused on Opposition leaders, especially during election periods, casting serious doubt on its independence," it said.

Deccan Chronicle, Dated: 27.02.2024

# EC ropes in banks, India Post for electoral awareness

DC CORRESPONDENT
NEW DELHI, FEB. 26

In a first-of-its-kind initiative to encourage a bigger turnout of voters, Election Commission of India (ECI) on Monday signed a memorandum of understanding (MoU) with the Indian Banks' Association (IBA) and the Department of Posts (DoP). The banks and post offices will spread voting awareness, as part of its efforts to increase voting percentage in the upcoming Lok Sabha polls.

Over 30 crores of the 91 crores electors did not cast their ballot in the previous parliamentary polls. The ECI has often expressed concern over urban and youth apathy with many registered voters not turning up at the polling stations to cast ballots in the previous elections. The latest move is yet another effort to amplify voter awareness ahead of the Lok Sabha elections.

**OVER 30 crores of the 91 crores electors did not cast their ballot in the previous parliamentary polls. The ECI has often expressed concern over urban and youth apathy towards polls.**

The ECI said that the initiative is in continuation of its efforts to enhance electoral awareness in the country. The ECI had recently signed a MoU with the ministry of education to integrate electoral literacy into the educational curriculum of schools and colleges.

As part of MoU with banks and Indian Postal Service, they will display voter education messages on their websites, for visitors to learn more about the electoral process.

Voter education messages will be displayed in the form of posters, flex, and hoardings at office premises at major locations, reaching customers at key touch points. The postal department will affix a special cancellation stamp (bearing voter education messages) on the postal articles.

Dt. Next

Dated: 27.02.2024

# Campaign on to improve Chennai's polling percentage

**CHENNAI:** Taking note of the low voting percentage in Chennai city, State Chief Electoral Officer Satyabrata Sahoo and Greater Chennai Corporation Commissioner J Radhakrishnan on Monday flagged off three awareness campaign vehicles (SVEEP activities vehicles) to sensitise the public about the need for voting and the functioning of electronic voting machines. "We will create awareness among the people in three regions. The purpose of the campaign is to ensure the public, especially youngsters and first time voters in the city, cast their votes," Sahoo said. The campaign vehicle would create awareness in colleges, among residents welfare associations and also focus on low-voting areas such as south Chennai, said Radhakrishnan.

Dt. Next

Dated: 27.02.2024

# Deep fakes, false narratives likely to sabotage level-playing field in polls: CEC

**NEW DELHI:** A group of ambassadors and nine countries' permanent representatives to the United Nations on Monday interacted with Chief Election Commissioner Rajiv Kumar who flagged the potential of false narratives, deep fakes and use of artificial intelligence to disturb the level playing field in polls. The CEC briefed the representatives about the vast magnitude of conducting elections in the world's largest democracy with nearly 97 crore registered electors who will cast their vote in around 12 lakh polling stations to be set up for the upcoming Lok Sabha elections. According to the EC, he said the Indian general election is the world's largest peacetime mobilisation of man and material which is carried out with clockwork precision. "He (CEC Rajiv Kumar) also highlighted the rising challenge of fake narratives, deep fakes and use of artificial intelligence being faced by democracies globally that has the potential of disturbing the level-playing field and election integrity," the poll panel said.

THE HINDU - TAMIL
Dated: 27.02.2024

# வங்கிகள், தபால் நிலையங்கள் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு

## தேர்தல் ஆணையம் ஏற்பாடு

வரும் மக்களவை தேர்தலில் ஓட்டுப்பதிவு சதவீதத்தை அதிகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, வங்கிகள், தபால் நிலையங்களில் வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்த தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்காக, இந்திய வங்கிகள் சங்கம் (ஐபிஏ) மற்றும் தபால் துறை (டிஓபி) ஆகிய இரண்டு முக்கிய அமைப்புகளுடன் தேர்தல் ஆணையம் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து கொண்டது. தேர்தல் தொடர்பான கல்வியறிவை பெற ஏதுவாக பள்ளிகள் மற்றும் கல்லூரி பாடத்திட்டத்தில் அவற்றை முறையாக ஒருங்கிணைக்க கல்வி அமைச்சகத்துடன் தேர்தல் ஆணையம் சமீபத்தில் இதுபோன்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணையம் இதுகுறித்து கூறியுள்ளதாவது: பதிவு செய்து கொண்ட வாக்காளர்கள் முந்தைய தேர்தல்களில் வாக்களிக்க வாக்குச் சாவடிகளுக்கு வரவில்லை. இது, நகர்ப்புற இளைஞர்களின் அக்கறை இன்மையை காட்டுகிறது. இது, தேர்தல் ஆணையத்துக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

91 கோடி வாக்காளர்களில் 30 கோடி பேர் முந்தைய நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. வாக்கு சதவீதம் 67.4 சதவீதமாக இருக்கும் நிலையில் அதனை மேம்படுத்தும் சவாலான பணியை தேர்தல் ஆணையம் இப்போது கையில் எடுத்துள்ளது.

இதற்காக, வரும் மக்களைவைத்




தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர் அருண் கோயல்.

தேர்தலில் வாக்காளரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வங்கிகள் மற்றும் தபால் நிலையங்களின் உதவியை தேர்தல் ஆணையம் நாடியுள்ளது.

இந்த பரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக ஐபிஏ, டிஓபி அதன் உறுப்பினர்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுடன் சேர்ந்து தேர்தல் குறித்த விழிப்புணர்வு கல்வியை வாக்காளர்களுக்கு வழங்கும். இவ்வாறு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்திய வங்கிகள் சங்கம் இப்போது நாடு முழுவதும் 247 உறுப்பினர்களுடன் வலுவான நெட்வொர்க்கை கொண்டுள்ளது. பொதுத் துறை வங்கிகள் 90,000 மேற்பட்ட கிளைகளையும், 1.36 லட்சம் ஏடிஎம் களையும், தனியார் துறை வங்கிகள் 42,000-க்கும் மேற்பட்ட கிளைகள் மற்றும் 79,000 ஏடிஎம்களையும் கொண்டுள்ளன.

DINA MALAR
Dated 27.02.2024

# வங்கிகள் வாயிலாக தேர்தல் விழிப்புணர்வு பிரசாரம்

புதுடில்லி, பிப். 27–

தேர்தலில் ஓட்டளிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், வங்கிகள் மற்றும் தபால் துறை வாயிலாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த தேர்தல் கமிஷன் திட்டமிட்டுள்ளது.

லோக்சபாவுக்கு விரைவில் தேர்தல் நடக்க உள்ளது. இதற்கான பணிகளில் தேர்தல் கமிஷன் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், ஓட்டு சதவீதத்தை உயர்த்தும் வகையில், பல பிரசார இயக்கங்களையும் தேர்தல் கமிஷன் நடத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ளும் வகையில் வங்கிகள் மற்றும் தபால் அலுவலகங்களை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, இந்திய வங்கிகள் சங்கம் மற்றும் தபால் துறையுடன், தேர்தல் கமிஷன் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன்படி, ஓட்டளிப்பது குறித்து விழிப்புணர்வு பணிகளில், வங்கிகள் மற்றும் தபால் அலுவலகங்கள் ஈடுபடும். இவற்றின் இணையதளத்தில், ஓட்டளிப்பது குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் உள்ளிட்டவை இடம்பெறும். மேலும், வங்கிகளின் கிளைகள், தபால் அலுவலகங்களில் விளம்பர வாசகங்கள் அடங்கிய பேனர்கள், போஸ்டர்கள் உள்ளிட்டவை வைக்கப்படும்.

வாடிக்கையாளர்களுடனான கலந்துரையாடல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடத்தப்பட உள்ளன.

கடந்த, 2019 லோக்சபா தேர்தலில், மொத்தமுள்ள, 91 கோடி வாக்காளர்களில், 67.4 சதவீத ஓட்டுகளே பதிவாயின. அந்தத் தேர்தலில், 30 கோடிக்கும் மேற்பட்டோர் ஓட்டளிக்கவில்லை. இதையடுத்து, ஓட்டளிப்பது குறித்த விழிப்புணர்வு பிரசாரங்களில் தேர்தல் கமிஷன் தீவிரம் காட்டியுள்ளது.

நாடு முழுதும் வங்கிகளுக்கு, 1.63 லட்சம் கிளைகளும், 2.19 லட்சம் ஏ.டி.எம்., மையங்களும் உள்ளன. நாடு முழுதும், 1.55 லட்சம் தபால் அலுவலகங்கள் உள்ளன.

The ECI ropes on hands with Banks, Post Offices to conduct campaign on importance of voting ahead of GELS 2024 polls.

DINA MALAR
27.02.2024

# லோக்சபா தேர்தல் பாதுகாப்புக்கு 200 கம்பெனி துணை ராணுவம்

**சென்னை, பிப். 27–** ''லோக்சபா தேர்தல் பாதுகாப்பு பணிக்கு, 200 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் தேவை,'' என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு கூறினார்.

அவர் அளித்த பேட்டி:

தமிழகம் வந்த தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல் ஏற்பாடுகள் திருப்திகரமாக உள்ளதாக தெரிவித்தார். சட்டசபை தொகுதிகள் காலி விபரம் குறித்து, சட்டசபை செயலகத்திடம் இருந்து தகவல் வரவில்லை; வந்தால், தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைப்போம். இடைத்தேர்தலை எப்போது நடத்துவது என்பதை, தேர்தல் கமிஷன் முடிவு செய்யும்.

பொன்முடி வழக்கின் தீர்ப்பு விபரத்தை, தேர்தல் கமிஷனுக்கு தெரியப்படுத்தி உள்ளோம். சட்டசபை செயலகம் முறைப்படி தெரிவித்த பின், அந்த தகவல் தேர்தல் கமிஷனுக்கு தெரியப்படுத்தப்படும்.

கடந்த, 2019 தேர்தலின் போது, 160 கம்பெனி துணை ராணுவம் வந்தது.

இந்த தேர்தலுக்கு, 200 கம்பெனி துணை ராணுவம் தேவை என, கோரப்பட்டது. மத்திய உள்துறை அமைச்சகம் முதற்கட்டமாக, 25 கம்பெனி மத்திய ஆயுத பாதுகாப்புப் படையினரை நியமித்துள்ளது.

அவற்றில், 15 கம்பெனி மத்திய ஆயுத பாதுகாப்புப் படையினர், மார்ச் 1லும்; 10 கம்பெனி மத்திய ஆயுத பாதுகாப்புப் படையினர், மார்ச் 7லும் தமிழகம் வர உள்ளனர்.



சத்யபிரதா சாஹு

கடந்த தேர்தலில், சட்டம் ஒழுங்கு பிரச்னை இருந்ததா என்ற விபரங்களை, தலைமை தேர்தல் ஆணையர், போலீஸ் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தேர்தல் விதிமீறல்கள் குறித்து புகார்கள் வந்தால், அதன் விபரத்தை, தேர்தல் கமிஷனின் இ.எஸ்.எம்.எஸ்., என்ற மொபைல் போன் செயலியில் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

ஏதேனும் பொருட்கள் பறிமுதல் செய்தாலும், அந்த மொபைல் போன் செயலியில் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதை அனைத்து துறை அலுவலர்களும் அறிந்து கொள்ள முடியும்.

தமிழகத்தில், 66 சதவீத ஓட்டுச்சாவடிகளில், 'வெப் கேமரா'க்கள் பொருத்தி, ஓட்டுப்பதிவு நேரடியாக இணையதளங்களில் ஒளிபரப்பப்படும். பதற்றமான ஓட்டுச்சாவடிகளில், கண்காணிப்பு கேமரா பொருத்தப்படும். 'மைக்ரோ' பார்வையாளர்கள் நியமிக்கப்படுவர்.

இவ்வாறு சத்யபிரதா சாஹு கூறினார்.

THE HINDU Dated: 27.02.2024

### மக்களவை தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்காக

# தமிழகத்துக்கு 200 கம்பெனி துணை ராணுவ படை

## • தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தகவல்

• சென்னை

தமிழகத்தில் மக்களவை தேர்தல் பாதுகாப்புக்காக தேர்தல் ஆணையம் 200 கம்பெனி துணை ராணுவப் படையை அனுப்ப உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்தார்.

தமிழகத்தில் தேர்தல் முன்னேற்பாடுகள், தலைமை தேர்தல் ஆணையர் வருகை, அறிவுறுத்தல்கள் உள்ளிட்டவை குறித்து நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் பொதுவாக தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திருப்தி தெரிவித்தார். சில மாவட்டங்களில் சில விஷயங்கள் குறித்து கவனம் மேற்கொள்ள அறிவுறுத்தினார். தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் பொதுவான பல பரிந்துரைகளை வழங்கின. குறிப்பாக ஒரே நாளில் தேர்தலை நடத்த வேண்டும். சிசிடிவி கேமராக்கள் அதிகளவில் வைக்க வேண்டும். ஒப்புகை சீட்டையும் முழுமையாக எண்ண வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

தேர்தல் ஆணையம் தமிழகத்துக்கு 200 கம்பெனி துணை ராணுவப் படையை அனுப்புவதாக கூறியுள்ளது. கடந்த தேர்தலில் 160 கம்பெனி படைகளை அனுப்பியது குறிப்பிடத்தக்கது. மார்ச் மாதம் ஒரு குறிப்பிட்ட கம்பெனி படையினர் அனுப்புவார்கள். அந்த படையினர் பதட்டமான பகுதியில் பணியமர்த்தப்படுவார்கள்.

தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாகவும், வேட்பு மனுத்தாக்கலின் போதும் பிரச்சினை ஏற்படலாம் என்பதன் அடிப்படையில் ஆய்வு செய்து படையினர் அனுப்பப்படுவார்கள். தேர்தல் முடிந்த பின்பும் சில நேரங்களில் எண்ணிக்கையின் போதும் அதிகளவில் படையினர் நிறுத்தப்படுவார்கள்.

தலைமை தேர்தல் ஆணையத்தில் இருந்து மாவட்ட வாரியாக கடந்த ஆண்டுகளில் எந்தமாதிரியான வழக்குகள் பதியப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல்களை ஆய்வின்போது கேட்டு பெற்றனர். பிடிவாரண்ட், குண்டர் சட்டம் தொடர்பான தகவல்களையும் கேட்டனர். அதன்பின், வாக்குச்சாவடி வாரியாக நிலைமை ஆய்வு செய்யப்பட்டு அதன்பின், முடிவெடுக்கப்படும்.

வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்ட பின், பார்வையாளர்கள் முழுமையாக ஆய்வு செய்து, தேவைப்படின் கூடுதல் இடங்களை பதட்டமான பகுதிகள் பட்டியலில் சேர்ப்பார்கள். வருமானவரித் துறை உள்ளிட்ட பல்வேறு அமலாக்கப் பிரிவினர் தகவல் பறிமாற 'இ-எஸ்எம்எஸ்' என்ற குறுஞ்செய்தி வசதியை மேம்படுத்தி தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இதில் வங்கி, அமலாக்கத் துறை, சுங்கத்துறை உள்ளிட்ட துறைகள் இணைக்கப்பட்டிருக்கும். இதில் எந்த துறை எந்த தகவல் பதிவிட்டாலும், அனைவருக்கும் பகிரப்படும். தகவல்கள் விரைவாக கிடைக்கும். அதன் மூலம் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவிஜில் என்பது பொதுமக்கள் புகார் அளிக்கும் வசதியாகும். வெப் காஸ்டிங் அதிகளவில் செய்ய வேண்டும் என்று அரசியல் கட்சிகள் கேட்பதால், தொடர் வீடியோ பதிவு வசதியும் செய்யப்பட உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### மார்ச் மாதம் 25 படைகள் வருகை

தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு வெளியிட்ட செய்திக்குறிப்பு: மக்களவைத் தேர்தல் தொடர்பாக 25 கம்பெனி மத்திய ஆயுத பாதுகாப்புப் படையினரை மத்திய உள்துறை அமைச்சகம் நியமித்துள்ளது. இதில் 15 கம்பெனி படையினர் வரும் மார்ச் 1–ம் தேதியும், 10 கம்பெனி படையினர் மார்ச் 7–ம் தேதியும் தமிழகத்துக்கு வரவுள்ளனர். இவ்வாறு சத்யபிரத சாஹு தெரிவித்துள்ளார்.

The CEO, Tamil Nadu informed that for GELS, 2024 there are 200 company paramilitary forces have allotted for bundobust

DAILY THANTHI

Dated: 27.02.2024

# வாக்குப்பதிவை அதிகரிக்க வங்கிகள், தபால் நிலையங்கள் மூலம் விழிப்புணர்வு

## தேர்தல் கமிஷன் நடவடிக்கை

புதுடெல்லி, பிப்.27–

நாடாளுமன்ற தேர்தலில் வாக்குப்பதிவை அதிகரிக்கும் வகையில் வங்கிகள் மற்றும் தபால் நிலையங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்து உள்ளது.

### குறையும் வாக்குப்பதிவு

நாடாளுமன்ற தேர்தல் விரைவில் நடைபெற இருக்கிறது.

ஆனால் தேர்தல்களில் அனைவரையும் வாக்களிக்கவைப்பது பெரும் சவாலாக இருக்கிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கூட மொத்தமுள்ள 91கோடி வாக்காளர்களில் 30 கோடிக்கும் அதிகமானோர் வாக்களிக்கவில்லை.

நகரங்களில் வசிப்போர் மற்றும் இளைஞர்களிடையே வாக்களிப்பதில் ஆர்வம் மிகவும் குறைவாக காணப்படுவதாக தேர்தல் கமிஷன் அடிக்கடி கவலை வெளியிட்டு வருகிறது.

எனவே வருகிற நாடாளுமன்ற தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிக்க தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக பல்வேறு தளங்கள் மூலம் விழிப்புணர்வு பணிகளில் இறங்கி இருக்கிறது.

### வங்கி, தபால் துறையுடன் ஒப்பந்தம்

இதில் முக்கியமாக பள்ளிகள், கல்லூரிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மத்திய கல்வி அமைச்சகத்துடன் சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை தேர்தல் கமிஷன் செய்து கொண்டது.

இதன் தொடர்ச்சியாக வங்கிகள் மற்றும் தபால் நிலையங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து உள்ளது. இதற்காக இந்திய வங்கிகள் சங்கம் மற்றும் தபால் துறையுடன் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது.

அதன்படி, வங்கிகள் சங்கம் மற்றும் தபால்துறையின் உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் தங்கள் தளங்கள் வழியாக வாக்குப்பதிவின் அவசியம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

### விழிப்புணர்வு நடவடிக்கை

இதில் முக்கியமாக இந்த நிறுவனங்கள் தங்கள் இணையதளங்களில் வாக்காளர் விழிப்புணர்வு செய்திகளை முக்கியமாக வெளியிடும். இது பார்வையாளர்களை தேர்தல் செயல்முறையைப் பற்றி மேலும் அறிய வழி செய்யும்.

மேலும் சமூக ஊடகங்கள் மற்றும் வாடிக்கையாளர் தளங்கள் போன்ற பல்வேறு விளம்பர சேனல்கள் மூலமும் வாக்காளர் விழிப்புணர்வு தகவல்கள் பரப்பப்படும். இது வாக்காளர்கள் மற்றும் பொதுமக்களிடையே பரவலான விழிப்புணர்வை உறுதி செய்யும்.

இதைப்போல தங்கள் அலுவலகங்கள் வளாகங்களில் வாக்குப்பதிவை ஊக்குவிக்கும் விளம்பரங்கள், பேனர்கள், போஸ்டர்கள் போன்றவை வைத்தும் மக்களின் கவனத்தை ஈர்க்கப்படும்.

### தேர்தல் கமிஷன் நம்பிக்கை

இந்திய வங்கிகள் சங்கத்தில் தற்போது 247 வங்கிகள் உள்ளன. இதில் பொதுத்துறை வங்கிகளை பொறுத்தவரை நாடு முழுவதும் 90 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகளும், 1.36 லட்சம் ஏ.டி.எம்.களும் உள்ளன.

இதைப்போல 42 ஆயிரத்துக்கு அதிகமான தனியார் வங்கிகளும், 79 ஆயிரத்துக்கு அதிகமான ஏ.டி.எம்.களும் உள்ளன. மேலும் 22,400 மண்டல கிராம வங்கிகள், 7 ஆயிரம் சிறிய நிதி நிறுவனங்கள், 3 ஆயிரத்துக்கும் அதிகமான ஏ.டி.எம்.களும் இந்த சங்கத்தின் கீழ் உள்ளன.

ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் 1.63 லட்சத்துக்கு அதிகமான வங்கி கிளைகளும், 2.19 லட்சம் ஏ.டி.எம்.களும் செயல்பட்டு வருகின்றன.

இவற்றின் மூலம் பரந்த அளவில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகளால் தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிக்க முடியும் என தேர்தல் கமிஷன் நம்பிக்கை தெரிவித்து உள்ளது.

The ECI has decided to create awareness through Bank and post offices to increase the voter turnout

DAILY THANTHI

Dated: 27.02.2024

# நகரங்களில் வாக்குப்பதிவு குறைவாக உள்ளது

## சத்யபிரத சாகு பேட்டி

சென்னை, பிப்.27-

சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகத்தில், மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பிரசார வாகனங்களை நேற்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு மற்றும் மாநகராட்சி கமிஷனர் ராதாகிருஷ்ணன் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

பின்னர், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு நிருபர்களிடம் கூறியதாவது:-

கிராமப்புறங்களை விட நகர்ப்புறங்களில் வாக்கு செலுத்துபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அவற்றை அதிகரிக்க ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. மேலும், முதல் முறை வாக்காளர்களான இளம் வாக்காளர்களுக்கு வாக்குபதிவு எந்திரங்கள் மூலம் எப்படி வாக்களிப்பது மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.


இதேபோல, குறைவான சதவீதம் வாக்குப்பதிவு உள்ள தொகுதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்லூரி வளாகம் மற்றும் வாக்குச்சாவடிகள் உள்ள பகுதிகளில் வாகனம் மூலம் விழிப்புணர்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

The CEO, Tamil Nadu says that polling percentage is less in urban area than in rural.

DAILY THANTHI

Dated: 27.02.2024



தேர்தலையொட்டி

# 26½ லட்சம் அழியாத மை பாட்டில் தயாரிப்பு பணி மும்முரம்

மைசூரு, பிப்.27–

கர்நாடக மாநிலம் மைசூருவில் மைசூரு பெயிண்ட்ஸ் மற்றும் வார்னிஷ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் இந்தியா மட்டுமின்றி 30–க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தேர்தலில் வாக்களித்தவர்களை அடையாளம் காணும் வகையில் ஆள்காட்டி விரலில் வைக்கப்படும் அழியாத மையை தயாரித்து வழங்கி வருகிறது.

நாடாளுமன்றத்திற்கு வருகிற ஏப்ரல் அல்லது மே மாதம் தேர்தல் நடக்க உள்ளது. இதையொட்டி இந்திய தேர்தல் ஆணையம் மைசூரு பெயிண்ட்ஸ் மற்றும் வார்னிஷ் நிறுவனத்துக்கு அழியாத மை தயாரிக்க கடந்த ஆண்டு (2023) டிசம்பர் மாதம் உத்தரவிட்டது. அதனை தொடர்ந்து இந்த ஆலையில் அழியாத மை தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இதுபற்றி மைசூரு பெயிண்ட்ஸ் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

நாடாளுமன்ற தேர்தலையொட்டி மைசூரு பெயிண்ட்ஸ் நிறுவனத்தில் அழியாத மை தயாரிப்பு பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. மொத்தம் 26 லட்சத்து 55 ஆயிரம் மை பாட்டில்களை தயாரிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டு உள்ளது. ஒரு அழியாத மை பாட்டிலில் 10 மில்லி மை இருக்கும். இதன் மூலம் 700 வாக்காளர்களுக்கு அழியாத மை வைக்க முடியும். நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வருவதால் அழியாத மை தயாரிப்பு பணி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

For GELS. 2024 the process of preparing 26½ Lakh indelible ink bottles is in process in Karnataka

THE HINDU - TAMIL - Dated: 27.02.2024

விஜயதரணி ராஜினாமா செய்ததை தொடர்ந்து

# விளவங்கோடு தொகுதி காலியானது

## தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பியது பேரவை செயலகம்

● சென்னை

காங்கிரஸில் இருந்து பாஜகவில் இணைந்த விஜயதரணி வெற்றி பெற்ற விளவங்கோடு தொகுதி காலியானதாக சட்டப்பேரவை செயலகம், தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இதையடுத்து, மக்களவை தேர்தலுடன் விளவங்கோடு தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடத்தப்பட வாய்ப்பு உருவாகியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தொகுதி எம்எல்ஏவாக விஜயதரணி இருந்தார். காங்கிரஸ் கட்சியில் இருந்து இவர் சமீபத்தில், பாஜகவில் இணைந்தார். இதையடுத்து, அவர் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்து, பேரவைத்தலைவருக்கு கடிதம் அனுப்பினார். காங்கிரஸ் கட்சித்தலைவர் செல்வப்பெருந்தகையும், விஜயதரணியை கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்யும்படி பேரவைத்தலைவருக்கு கடிதம் எழுதினார். இதையடுத்து, விஜயதரணியின் ராஜினாமா ஏற்கப்பட்டதாக பேரவைத்தலைவர் மு.அப்பாவு நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹுவிடம், நேற்று காலை விளவங்கோடு மற்றும் முன்னாள் அமைச்சர் பொன்முடி போட்டியிட்டு வென்ற, திருக்கோவிலூர் தொகுதிகள் தொடர்பாக சட்டப்பேரவை செயலகத்தில் இருந்து தகவல் வந்ததா என கேட்டபோது, "இரு தொகுதிகள் தொடர்பாக தகவல் ஏதும் வரவில்லை.உடனே அனுப்பவேண்டும் என்ற காலவரையறை ஏதும் இல்லை. நாங்கள் கேட்கவும் முடியாது. கடிதம் வந்தால் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்படும். தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக காலியிடம் குறித்து அறிவிக்கும். தொகுதி காலியாக இருந்தால் 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்" என்றார்.

இந்நிலையில், நேற்று மாலை, விளவங்கோடு தொகுதி காலியாக உள்ளதாக சட்டப்பேரவை செயலகத்தில் இருந்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்த கடிதம் விரைவில் இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்படும் பட்சத்தில், தொகுதி காலியாக இருப்பதாக தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும். தொடர்ந்து, மக்களவை தேர்தலுடனேயே, விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தலும் நடத்தப்பட வாய்ப்புள்ளது.

முன்னதாக, அமைச்சராக இருந்த பொன்முடிக்கு எதிரான வழக்கில் நீதிமன்றம் தண்டனை வழங்கியதால் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி, அவர் அமைச்சர் மற்றும் எம்எல்ஏ பதவிகளை இழந்தார். இருப்பினும் நீதிமன்றம் மேல்முறையீட்டுக்கான அவகாசம் வழங்கியது. இதனால், அமைச்சரவையில் இருந்து அவர் நீக்கப்பட்டாலும், எம்எல்ஏக்கள் பட்டியலில் திருக்கோவிலூர் எம்எல்ஏவாக தொடர்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

DINAMALAR - Dated: 27.02.2024

# விளவங்கோடு தொகுதி காலியாக உள்ளதாக அறிவிப்பு

**சென்னை, பிப். 27–**

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டசபை தொகுதி காலியாக உள்ளதாக, நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

விளவங்கோடு சட்டசபை தொகுதியில், 2021 சட்டசபை தேர்தலில், காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட விஜயதரணி வெற்றி பெற்றார்.

கடந்த வாரம் அவர், பா.ஜ.,வில் இணைந்தார்; எம்.எல்.ஏ., பதவியையும் ராஜினாமா செய்தார்.

அவரது ராஜினாமாவை, சபாநாயகர் அப்பாவு ஏற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து, விளவங்கோடு தொகுதி காலியாக உள்ளதாக, சட்டசபை செயலர் சீனிவாசன், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹுவுக்கு கடிதம் அனுப்பினார்.

தமிழக அரசின் அதிகாரப்பூர்வ இணைய தளத்திலும் காலியாக இருப்பதாக, நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

இதனால், லோக்சபா தேர்தலுடன், விளவங்கோடு தொகுதிக்கு இடைத்தேர்தல் நடக்க வாய்ப்புள்ளது.

சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றதால், பொன்முடியின் எம்.எல்.ஏ., பதவி காலியானது.

ஆனாலும், அவர் எம்.எல்.ஏ.,வாக தேர்வு செய்யப்பட்ட, திருக்கோவிலூர் தொகுதி காலியானதாக இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

The Vijavancode AC has been announced vacant due to the resignation of MS. Vijayatherani from Congress party.